# இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2024–ஆம் வருடம் ஜுலை மாதம் 26–ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 19.07.2024

தலைவர்,
நகர் மன்றம்.

## பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில், இந்நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் நிகழும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவறிக்கை, இறந்து பிறந்ததற்கான அறிக்கை மற்றும் DBC பணியாளர் வருகை கணக்கெடுப்பு பதிவேடு மேலும், பொது சுகாதாரப் பிரிவிற்குத் தேவையான படிவங்கள், அறிக்கைகள் மற்றும் பதிவேடுகள் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 3,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1771/24/பி3)

**தீர்மானம் எண். 581**

அனுமதிக்கப்பட்டது.

(2) இந்நகராட்சியில் சேகரமாகும் கழிவுநீர் கால்வாய் கழிவுகள் பழைய எருக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. இக்கழிவுகளை JCB மூலம் நிரவும் பணி மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 2.00/– லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(1668/24/எச்1)**

**தீர்மானம் எண். 582**

அனுமதிக்கப்பட்டது.

(3) இந்நகராட்சியில் கொசு மூலம் பரவும் நோய்களை தடுக்கும் பொருட்டு கொசுப்புழு தடுப்பு பணியில் ஈடுபடும் சுயஉதவிக் குழுவின் 50 பணியாளர்களை ஜுலை 2024 முதல் மேலும் ஓராண்டிற்கு பயன்படுத்திக் கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ. 40.00/– லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(1664/24/எச்1)**

**தீர்மானம் எண். 583**

அனுமதிக்கப்பட்டது.

(4) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள் பழுதடைந்துள்ளதால் புதியதாக நான்கு எண்ணிக்கை நவீன கணினிகளும், பிரிண்டர்கள் நான்கு எண்ணிக்கையும் வாங்கிக் கொள்ளவும் இதற்கான செலவினம் ரூ. 3.50/– லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(1665/24/எச்1)**

**தீர்மானம் எண். 584**

அனுமதிக்கப்படுகிறது.

(5) இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில், கொசுத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள தேவையான மருந்துகளை அரசு நிர்ணயித்துள்ள விலையில், அரசு அனுமதித்துள்ள நிறுவனங்களில் வாங்கவும் இதற்கான 2024–2025–ஆம் ஆண்டுக்கான செலவினம் ரூ. 10.00/– லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(1666/24/எச்1)**

**தீர்மானம் எண். 585**

அனுமதிக்கப்பட்டது.

(6) இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில், சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள கிருமிநாசினிகள் (சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், பினாயில், ஆசிட்) 2024–2025–ஆம் ஆண்டிற்கு தேவையானதை வாங்கவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ. 10.00/– லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(1667/24/எச்1)**

**தீர்மானம் எண். 586**

அனுமதிக்கப்படுகிறது.

(7) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்ட விதிகள் 2023–இல் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சியிலுள்ள அனைத்து வணிக நிறுவனங்களும் உரிமம் பெற்று செயல்பட வேண்டும். எனவே, ஓர் ஆண்டிற்கான உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்து, துணை விதிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(1041/24/எச்1)**

**தீர்மானம் எண். 587**

அனுமதிக்கப்பட்டது.

(8) இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபட்டு வரும் எஸ்.ஆர். எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் பணிக்காலம் 30.04.2024 உடன் ஓராண்டு முடிவதால் மேலும் 01.05.2024 முதல் 04 மாதங்களுக்கு பணி நீட்டிப்பு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(3899/22/எச்1)**

**தீர்மானம் எண். 588**

அனுமதிக்கப்பட்டது.

( 9 ) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குள் பழங்காலக் கட்டிடங்கள் அமைந்த தொடர் கட்டிடப் பகுதியும் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் வாழும் பகுதியையும் கண்டறிந்து கீழ்கண்ட சர்வே எண்களிலுள்ள பகுதியினை தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி எண். 30(1)–இன்கீழ் தொடர் கட்டிடப் பகுதியாக (Continues Building Area) அறிவிப்பு செய்யவும், விதி 30(2)–இன்படி பொருளாதாரத்தில் நலிவடைந்த பகுதியாக (Economically Weaker Section) அறிவிப்பு செய்யவும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் வழியாக அரசிற்கு மேலனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| இராசிபுரம் தொடர் கட்டிடப் பகுதி (Continues Building Area) மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பகுதியாக (Economically Weaker Section) | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **சர்வே வார்டு எண்** | **பிளாக் எண்** | **நகர புல எண்கள்** | **திட்டப்பகுதி / திட்டமில்லாப் பகுதி** |
| 1 | C | 5 | 2 முதல் 40, 71 முதல் 104, 106 முதல் 113, 115 முதல் 118, 120 முதல் 123, 125 முதல் 141, 143 முதல் 153, 155 முதல் 180, 182 முதல் 192, 195 முதல் 197, 199 முதல் 214, 233 முதல் 242, 245 முதல் 254, 267முதல் 273, 275 முதல் 283, 284/1, 286 முதல் 301, 303 முதல் 307, 309 முதல் 318, 321 முதல் 327, 330 முதல் 332, 345,346,348 முதல் 350, 352 முதல் 356, 358 முதல் 381, 383 | திட்டமில்லாப் பகுதி |
| 2 | C | 3 | 42 முதல் 49, 51 முதல் 69, 193, 194, 215 முதல் 231, 243, 244, 255, 256, 258 முதல் 266, 328, 329, 333 முதல் 344 | திட்டமில்லாப் பகுதி |
| 3 | B | 2 | 5 முதல் 16, 18, 20 முதல் 25, 29, 39 முதல் 56 | திட்டமில்லாப் பகுதி |
| 4 | B | 3 | 2 முதல் 10, 12 முதல் 23, 25 முதல் 30, 32 முதல் 40, 42 முதல் 55, 57 முதல் 68, 70 முதல் 81, 83 முதல் 117, 119 முதல் 128, 130 முதல் 135, 137முதல் 147, 149, 150, 152 முதல் 154, 156 முதல் 163, 165 முதல் 168 | திட்டமில்லாப் பகுதி |
| 5 | B | 4 | 3 முதல் 16, 18 முதல் 44, 50 முதல் 85 | திட்டமில்லாப் பகுதி |
| 6 | B | 7 | 2 முதல் 12, 14 முதல் 20, 22 முதல் 25, 27 முதல் 30, 32 முதல் 55, 57 முதல் 100, 103 முதல் 112, 114, 115, 117, 120 முதல் 153, 155 முதல் 157, 162 முதல் 167, 169 முதல் 196, 198/1, 198/2, 198/3A2, 3B, 199, 200, 202 முதல் 208, 210 முதல் 222, 224 முதல் 228, 230 pt, (230/1A1A தவிர) 231, 232 | திட்டமில்லாப் பகுதி |
| 7 | B | 8 | 12 முதல் 15, 17, 19 முதல் 24, 26 முதல் 35, 37 முதல் 40, 42 முதல் 56, 58 முதல் 62, 64 | திட்டமில்லாப் பகுதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முதல் 72, 75 முதல் 78, 80 முதல் 87, 90 முதல் 97, 99 முதல் 106, 108 முதல் 113, 115 முதல் 125, 127 முதல் 130, 132 முதல் 136, 138 முதல் 141, 143 முதல் 148, 150 முதல் 162, 165 முதல் 168, 172, 176 pt.–இல் பாரதிதாசன் சாலையை அணுகுப்பாதையாக உள்ள பழைய கடைகள் மட்டும் 173. | |
| 8 | B | 9 | 13 முதல் 15, 17 முதல் 22, 25 முதல் 41, 43 முதல் 54, 551/A, 55/1C, 55/2B முதல் 2G, 55/2H, 55/2H2, 24 | திட்டமில்லாப் பகுதி |
| 9 | B | 10 | 17/1, 17/2A, 17/2C, 17/3 | திட்டமில்லாப் பகுதி |
| 10 | A | 4 | 52pt, 53pt, 54 முதல் 59, 61 pt, 94 pt, 95 pt, 96 pt, 97 pt, 99 pt, 107, 108, 110, 111 | விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்–1 |
| 11 | A | 6 | 73 pt, 161 முதல் 168 | விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்–1 |
| 12 | A | 5 | 6 முதல் 8, 14, 15, 21, 23, 24, 9 முதல் 12, 101 முதல் 120 | விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்–1 |
| 13 | B | 10 | 40pt, 45pt, 46pt | விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்–1 |
| 14 | B | 11 | 2pt, 3, 5, 6 pt, 7 முதல் 44, 46 pt, 48/1, 48/2pt, 45/1C pt, 45/1A, 45/2, 45/1B2A pt | விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்–3 |
| 15 | B | 5 | 2 முதல் 126 | தந்தை பெரியார் விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 16 | B | 6 | 79 முதல் 105, 2 முதல் 10 | தந்தை பெரியார் விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 17 | B | 8 | 2 முதல் 162 | தந்தை பெரியார் விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 18 | B | 10 | 2 முதல் 48 | தந்தை பெரியார் விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 19 | C | 17 | 1 முதல் 7, 9 முதல் 109, 111 முதல் 140 | கிழக்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 20 | C | 18 | 1 முதல் 178 (148/2[a] தவிர) | கிழக்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 21 | C | 19 | 1 முதல் 87 | கிழக்கு விஸ்தரிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 22 | C | 20 | 1 முதல் 128 (36 மற்றும் 43 தவிர) | கிழக்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 23 | C | 16 | 2 முதல் 20 | கிழக்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 24 | D | 1 | 2 முதல் 102 | கிழக்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 25 | D | 2 | 1 முதல் 130, 133, 136, 137, 140 முதல் 145 | கிழக்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 26 | D | 3 | 1 முதல் 92 | கிழக்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 27 | D | 6 | 2 முதல் 109 (107/2108, 109 தவிர) | கிழக்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தித் திட்டம் |
| 28 | D | 8 | 18 முதல் 22, 27 முதல் 91, 108 முதல் 172 | கிழக்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தித் திட்டம் |

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1504/23/எப்1)

**தீர்மானம் எண். 589**

அனுமதிக்கப்பட்டது.

(10) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 27, கோனேரிப்பட்டி மேற்கு பிளாக் தெரு பகுதியில், ச.வார்டு – D, பிளாக்– 8, நகர புல எண். 106/15– இல் மனுதாரர் திரு. எல். கண்ணன், த/பெ. லோகநாதன், கதவு எண். 156A, மாரியம்மன் கோவில் தெரு, தண்ணீர் பந்தல் காடு, ஆத்தூர் மெயின் ரோடு, மூலப்பள்ளிபட்டி அஞ்சல், இராசிபுரம் தாலுக்கா என்பவருக்கு 1.40 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் 28 குடியிருப்பு மனைகள் உள்ளடக்கிய மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் மனைப்பிரிவு வரைபட எண். SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO. 95/2024 நாள் 10.04.2024–இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகளான தார் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் குழாய் வசதி, மழைநீர் கால்வாய் ஆகிய வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. பாதாள சாக்கடை அமைக்க ரூ. 6,80,000/- இந்நகராட்சி பற்று சீட்டு எண். 053/01/2/24–25/0001903 நாள் 16.07.2024–இல் செலுத்தியுள்ளார். மேலும் மனுதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய இதரக் கட்டணம் ரூ. 60,870/–ஐ இந்நகராட்சி பற்றுச்சீட்டு எண். 053/01/2/24–25/0001902 நாள் 16.07.2024–இல் செலுத்தியுள்ளார். மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் தானப்பத்திர ஆவண எண். 4578/2023 நாள்

30.07.2023–இன்படி சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு 1881.45 சதுர மீட்டர் இடமும், பொது உபயோகத்திற்காக 19.36 சதுர மீட்டர் இடமும் ஆணையாளர் பெயரில் தானமாக பதிவு செய்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்கள் மூலம் நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதை பின்னேற்பு ஒப்புதல் பெறுவதற்கும், மேற்க்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அரசாணை (நிலை) எண். 181 மற்றும் 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 09.12.2020 மற்றும் 16.07.2022 மற்றும் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 12843/22/டிபி2 நாள் 20.10.2022 சுற்றறிக்கையின்படியும், மேற்க்கண்ட தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை தானப்பத்திரத்தின்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஏற்க, தானமாக பத்திரப்பதிவு செய்ததை இம்மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம் மற்றும் மேற்க்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

(1699/24/எப்1)

**தீர்மானம் எண். 590**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

(11) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–இல் உள்ள சி.பி கண்ணைய்யா தெருவிலுள்ள பொதுக்கழிப்பிடத்தில் பராமரிப்பு பணி செய்தல் (5467/23/இ1) பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். 503 நாள் 29.12.2023-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 3,00,000/- என்ற மதிப்பீட்டிற்கு 27.02.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | திரு N.செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 1.00% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருமதி R. ஷாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் | -0.03% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விடக் குறைவான -0.03% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி R. ஷாகிதா, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(5467/23/இ1)

**தீர்மானம் எண். 591**

அங்கீகரிக்கப்பட்டது.

(12) இராசிபுரம் நகராட்சியில் அம்மா உணவகத்தில் தற்போது பெய்த மே மாத கோடை மழையின் காரணமாக அம்மா உணவகத்தின் மேற்கூரை பழுதடைந்ததை நீக்கம் செய்யும் பணி பிரிவு57(7) (Section57(7)) -ன் கீழ் மேற்கொள்ளபட்டு அதற்கான செலவு செய்யப்பட்ட தொகை ரூ.107246/- என்பதால் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1555/24/இ1)

**தீர்மானம் எண். 592**

அங்கீகரிக்கப்பட்டது.

**(13 )** இராசிபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஈப்பு வாகனம் எண் TN28 CZ 6111-க்கான **5–**ஆவது இலவச சர்வீஸ் செய்ததற்கான செலவினத் தொகை ரூ. **9302**/- திரு ப. சீரங்கன், ஓட்டுநர் அவர்களால் செலவு செய்யப்பட்டதால் மேற்படி தொகையினை ஓட்டுநர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்

ஆ) மேற்கண்ட செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(3602/22/இ1)**

**தீர்மானம் எண். 593**

அங்கீகரிக்கப்பட்டது.

**(14)** இராசிபுரம் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஈப்பு வாகனம் எண். TN 28 CZ 6222-ற்கான **4–**ஆவது இலவச சர்வீஸ் செய்வதற்காக உத்தேச செலவினத் தொகை ரூ. **22698**/- ற்கு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்

ஆ) மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(3602/22/இ1)**

**தீர்மானம் எண். 594**

அனுமதிக்கப்பட்டது.

**(15 )** இராசிபுரம் நகராட்சி குடிநீர் வாகன எண் TN28 BZ **9021**ல் ஏற்கனவே உள்ள மின்கலம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பதாக வாங்கப்பட்டது. தற்போது பழுதடைந்து உள்ளதால் அந்த மின்கலத்தை கொடுத்து புதிய மின்கலம் மாற்றவும் விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் குறைவாக விலைப்புள்ளி ரூ.**11700**/- அளித்த ஆட்டோ பாயின்ட், இராசிபுரம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி செலவினத்தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்

ஆ) மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(3956/22/இ1)**

**தீர்மானம் எண். 595**

அங்கீகரிக்கப்பட்டது.

**(16)** இராசிபுரம் நகராட்சி குடிநீர் வாகன எண். TN 28 BZ **9021–**இல் லாரியின் பின்புறம் பிரேக் பூஸ்டர் மற்றும் வால்வு கிட் பழுதாகி ஏர் லீக் ஆவதால் அதனை சரி செய்ய அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. **38000**/- குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்

ஆ) மேற்கண்ட செலவின தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3956/22/இ1)

**தீர்மானம் எண். 596**

அனுமதிக்கப்பட்டது.

**(17)** இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் அரசாணை நிலை எண். 97, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.02.2007 மற்றும் நகராட்சி நிருவாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/2008/குவ2, நாள் 21.09.200–இன்படி புதியதாக குடிநீர் இணைப்பு பெறுபவர்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய சாலை பராமரிப்புக் கட்டணம் முந்தைய ஆண்டிலிருந்து 5% உயர்த்தி வசூல் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்கும் போது சாலை பராமரிப்புக் கட்டணம் கீழ்கண்டவாறு 5 % 01.04.2024 முதல் உயர்த்தி வசூல் செய்யப்படவுள்ளது. தேர்தல் நடத்தை விதிமுறைகளினால் சாலை பராமரிப்புக் கட்டணம் 5% உயர்த்தியதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | சாலை விவரம் | 01.04.2023 முதல் வசூலிக்கப்படும் கட்டணம் | 01.04.2024 முதல் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| 1 | **கருங்கல் ஜல்லி சாலை** | | |
| | 30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 2090/- | ரூ. 2189/- |
| | 30 மீட்டர் முதல் 90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 3385/- | ரூ. 3554/- |
| 2 | **தார்சாலை** | | |
| | 30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 4468/- | ரூ. 4681/- |
| | 30 மீட்டர் முதல் 90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 5662/- | ரூ. 5945/- |
| 3 | **சிமெண்ட் சாலை** | | |
| | 30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 5157/- | ரூ. 5403/- |
| | 30 மீட்டர் முதல் 90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 6357/- | ரூ. 6675/- |

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1352/23/இ2)

**தீர்மானம் எண். 597**

அங்கீகரிக்கப்பட்டது.

**(18)** நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 6450/2024/ SBM -1(1), நாள் 14.03.2024–இன்படி இந்த நகராட்சிக்கு தூய்மை இந்தியா 2.O திட்டத்தின் கீழ் வார்டு எண் 1–இல் மேற்கு காலனி தெருவில் புதியதாக சமுதாய கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு ரூ. 25,50,000/– மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற ஆணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(844/24/இ1)

**தீர்மானம் எண். 598**

அங்கீகரிக்கப்பட்டது.

**(19)** நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். **6450/2024/** SBM -1(1), நாள் **14.03.2024–**இன்படி இந்த நகராட்சிக்கு தூய்மை இந்தியா **2.O** திட்டத்தின் கீழ் வார்டு எண் **1–**இல் மேற்கு காலனி தெருவில் புதியதாக அமைக்கும் சமுதாய கழிப்பிடத்தில் **4** சிறுநீர் கழிப்பறைகள் அமைக்கும் பணிக்கு ரூ. **1,28,000/–** மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற ஆணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(844/24/இ1)**

**தீர்மானம் எண். 599**

அங்கீகரிக்கப்பட்டது.

**(20)** இராசிபுரம் நகராட்சியில் வார்டு எண். **7–**இல் வி.நகர் தெருவில் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் உள்ள திறந்த வெளிக்கிணற்றில் உள்ள மரங்களை அகற்றும் பணி ரூ. **35,000/–** மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணிக்கு மன்றத்தின் அனுமதியும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.
ஆ) மேற்கண்ட செலவினத் தொகை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2000 /24/இ1)**

**தீர்மானம் எண். 600**

அங்கீகரிக்கப்பட்டது.

**(21)** இராசிபுரம் நகராட்சியில் வார்டு எண்**19**ல் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி, காட்டூரில் வளாகத்தில் இயங்கி வரும் அங்கன்வாடி மையம் தற்போது கூரையில் பழுது ஏற்பட்டு மழைநீர் தேங்கி கூரை பழுதாகி உள்ளது. மேலும் நடைபாதையில் கான்கிரீட் பாதை அமைத்தல் மற்றும் சமையற்கூடம் சீரமைத்தல் பணிக்கு ரூ.**2,50,000** மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.
ஆ) மேற்கண்ட செலவினத் தொகை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2010/24/இ1)**

**தீர்மானம் எண். 601**

அனுமதிக்கப்பட்டது.

**(22)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **9–**இல் உள்ள வி.நகர் **2–**இல் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் பராமரிப்பு பணி செய்தல் **(5466/23/இ1)** பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். **508** நாள் **29.12.2023**-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. **2,00,000/-** என்ற மதிப்பீட்டிற்கு **27.02.2024**-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | M/S. ஹரி கன்ஸ்ரக்ஷன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 0.91% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S. முருகன் கன்ஸ்ரக்ஷன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 1.03% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விடக் குறைவான 0.91 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. ஹரி கன்ஸ்ரக்ஷன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

(5466/23/இ1)

**தீர்மானம் எண். 602**

அங்கீகரிக்கப்பட்டது.

(23) இராசிபுரம் நகராட்சியில் உள்ள வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள பகுதியில் ஆழ்துளைக்கிணற்றில் உள்ள பழுதடைந்த மின்மோட்டார்களை சரி செய்தல் (5470/23/இ1) பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். 519 நாள் 29.12.2023-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 3,00,000/- என்ற மதிப்பீட்டிற்கு 27.02.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | திரு R. ரங்கசாமி, ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 0.81% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி R. ஷாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 1.2% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விடக் குறைவான 0.81 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு R. ரங்கசாமி, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

(5470/23/இ1)

**தீர்மானம் எண். 603**

அங்கீகரிக்கப்பட்டது.

(24) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், ஆய்வுகூட்டங்கள், நேரடி தல ஆய்வுகள் மற்றும் நகராட்சி அறிவிப்புகள் ஆகியவற்றை சமூக ஊடங்களான X, Face book, Whats app, Instagram மற்றும் சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்யப்படவும் பொதுமக்களிடமிருந்து சமூக ஊடகம் மற்றும் வலைதளங்கள் மூலம் வரப்பெறும் குறைகளை தொடர்ந்து கண்காணித்து தொடர் நடவடிக்கை மேற்கெகாள்ளப்படவும் மேற்கண்டப் பணிகளை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள மாதம் ஒன்றிற்கு ரூ. 7100/- (GST உட்பட) வீதம் பத்து மாதங்களுக்கு ரூ. 85200/- செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2028 /24/இ1)

**தீர்மானம் எண். 604**

அங்கீகரிக்கப்பட்டது.

(25) இராசிபுரம் நகராட்சியில் வார்டுஎண் 27ல் கோனேரிப்பட்டி காட்டுக்கொட்டாய் பகுதியில் அமைந்துள்ள நியாய விலைக்கடையினை புதுப்பிக்கும் பணி மற்றும் வார்டு எண் 24ல் திரு.வி.க பூங்காவில் உள்ள பழுதடைந்த விளையாட்டு உபகரணங்களை மாற்றுதல் பணி ஆகிய

பணிகளுக்கு ரூ.1,30,000 மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** அ)மன்றம் அங்கீகரிக்கலாம்
ஆ)மேற்கண்ட செலவின தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1812 /24/இ1)**

**தீர்மானம் எண். 605**

அனுமதிக்கப்பட்டது.

**(26)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 20–ல் உள்ள பழனி தெருவில் உள்ள கழிப்பிடத்தில் பராமரிப்பு பணி செய்தல் **(5468/23/இ1)** பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். **504** நாள் **29.12.2023**-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. **90,000/-** என்ற மதிப்பீட்டிற்கு **27.02.2024**-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | M/S. ஹரி கன்ஸ்ரக்ஷன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 0.81% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S. முருகன் கன்ஸ்ரக்ஷன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 1.04% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விடக் குறைவான **0.81** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. ஹரி கன்ஸ்ரக்ஷன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** அ)மன்றம் அங்கீகரிக்கலாம்

**(5468 /23/இ1)**

**தீர்மானம் எண். 606**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.